DEPOSITION OF WITNESS

IN THE COURT OF PRINCIPAL LABOUR COURT, COIMBATORE.

**CP** 81/2025

| | |
|---|---|
| DEPOSITION OF WITNESS | PW1 |
| NAME | M.R. தாஸ் |
| FATHER NAME | ரங்கசாமி |
| ADDRESS | 2, கொக்காளி தோட்டம், ஒண்டிபுதூர், கோயம்புத்தூர். |
| AGE | 71 |

Solemnly affirmed in accordance with provision of Act x of 1875.

Date.14.11.2025

**முதல் விசாரணை –**

நான் இவ்வழக்கின் மனுதாரர் ஆவேன், நான் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் 1978 ல் நடத்துநராக பணி நியமனம் செய்யப்பட்டு இறுதியாக கண்காணிப்பாளர் என்ற பதவி வழங்கப்பட்டு, 29.02.2012ல் பணி ஓய்வு பெற்றேன். அதற்காக எதிர்மனுதாரர் நிறுவனம் வழங்கிய பணி ஓய்வு ஆணை Ex P1. நான் கடைசியாக பணியாற்றிய காலத்திற்கான சம்பள இரசீதின் நகல் Ex P2. எதிர்மனுதாரர் நிறுவனத்தில் 1992 ல் ஓய்வு கால சேம

நல நிதி திட்டம் என்ற திட்டம் உருவாக்கப்பட்டு ரூபாய் 1000/- எதிர்மனுதாரர் நிறுவனம் பங்களிப்பாகவும் ஒவ்வொரு தொழிலாளியின் மாத ஊதியத்திலிருந்தும் ரூ. 50/- மேற்படி திட்டத்தில் பிடித்தம் செய்யப்பட்டு வந்தது. பின்னர் அந்த தொகை ரூ. 150/- ஆக உயர்த்தப்பட்டு மாத ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்டு வந்தது. அதற்காக தொழிற்சங்கத்திற்கும், நிருவாகத்திற்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் நகல் Ex P3. அதற்காக தொழிற்சங்கத்திற்கும், நிருவாகத்திற்கும் இடையே 2011ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் நகல் Ex P4. அதற்காக தொழிற்சங்கத்திற்கும் நிருவாகத்திற்கும் இடையே 04.01.2018 ல் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் நகல் Ex P5. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் நீதிப்பேராணை மேல்முறையீடு 1774/2011 சேமநல நிதி திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாதமும் ரூ. 1000/- வழங்க வேண்டும் என்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் நகல் Ex P6. இந்த

திட்டப்படி மாதா மாதம் ரூ. 1000/- பணி ஓய்வு பெற்ற தொழிலாளிக்கு வழங்க வேண்டியதில் எனக்கு 2012 முதல் 2016 வரையிலும் அதிலும் சில மாதங்கள் விடுப்பட்டு கொடுக்கப்பட்டு வந்தது. எனது கணக்கீட்டு பட்டியலில் நான் மேற்படி விவரங்களை குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். அதன் படி எனக்கு 2025 ம் வருடம் மே மாதம் வரையிலும் ரூ. 1,25,750/- உரிய வட்டியுடன் எதிர்மனுதாரர் தர வேண்டியுள்ளது என்று மாண்புமிகு நீதிமன்றம் உத்தரவிட வேண்டுமாறு வணக்கத்துடன் வேண்டி கொள்கிறேன்.

குறுக்கு விசாரணை

சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு எண் 1774/2011க்கு எதிராக எதிர்மனுதாரர் நிறுவனம் மேல்முறையீடு செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ரூ.750/- லிருந்து மாதாமாதம் PRBS schemeல் எனக்கு ரூ. 19500/- வழங்கப்பட்டுள்ளது என்றால் இல்லை. ரூ. 18750/- மட்டும் வழங்கப்பட்டு

பின்பு நிறுத்தம் செய்யப்பட்டது என்றால் அந்த தொகையை கழித்து தான் இந்த மனு கணக்கீடு தாக்கல் செய்துள்ளோம். Review petition நிலுவையில் இருப்பதால் தான் எதிர்மனுதாரர் நிறுவனம பணம் வழங்குவதை நிறுத்தியது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மாதாமாதம் ரூ. 1000/- வருவது நிறுத்தியது சம்பந்தமாக எதிர்மனுதாரருக்கு கடிதம் ஏதேனும் சமர்பித்தேனா என்றால் சமர்பித்தேன். ஆனால் நிர்வாகத்திடம் இருந்து எந்த பதிலும் வரவில்லை. அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் Review petition நிலுவையில் உள்ளதால் பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/-xxx

தலைமை தாங்கும் அதிகாரி,

முதன்மை தொழிலாளர் நீதிமன்றம்,

கோயமுத்தூர்.